1972 டிசம்பர் 4]

செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. இப்பொழுது நூலகக் குழு விற்கு தனி இயக்குநர் நியமிக்கப்பட்டிருக்கிருர். தெலுங்குப் புத்தகங்கள் தேவைப்படுகிற பகுதிகளில், இப்பொழுது போடவில்லையென்ருல், அதை அவரு டைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்த நூலகங்களிலே அதிகமான தெலுங்கு புத்தகங்கள் போட ஏற்பாடு செய்ய லாம்.

திரு. மு. சுருளிவேல்: தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் பகுதியிலும், பழனி பகுதியிலும், போடி பகுதியிலும் குடியிருக்கிற மக்கள் மொழிக் கொள் கைக்கேற்ப தமிழ் மொழியைப் பயின்று, தாய்மொழி இலக்கணப்படி கன்ன டத்தை எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளமுடியவில்லை. அந்தப் பெரும் குறை எங்களுக்கு இருக்கிறது. எனவே, இந்த அரசு கன்னடத்தைத் தாய்மொழி யாகப் பெற்றிருக்கிற எங்களுக்கு இந்த மொழியைக் கற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. ஆனல், குறிப்பிட்ட மொழியைத் தாய் மொழி யாகக் கொண்டவர்கள், குறிப்பிட்ட மாணவர்கள் சேருவார்கள் என்ற உத்தர வாதம் கிடைக்குமானல் குறைந்தது 15 மாணவர்களாவது சேரவேண்டுமென்று இருக்கிறது—அதற்கான வசதிகளைச் செய்துதர இப்பொழுதே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. சென்னை நகரைப் பொறுத்தவரையிலே 13 மொழி களில் இப்படி பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டி ருக்கிறது.

Siddha Dispensary in Secretariat

* 26 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the cost of maintenance of the Siddha Dispensary at the Secretariat for the years 1970–71 and 1971–72; and

(b) the steps taken to improve the Dispensary?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தலைமைச் செயலக அலுவலகத் தில் அமைந்துள்ள சித்த மருந்தகத்திற்கு 1970-71-ம் ஆண்டின் பராமரிப்புச் செலவு ரூ. 52,196.11-ம், 1971-72-ம் ஆண்டின் செலவு ரூ. 49,536.07-ம் ஆகும்.

(இ) முன்னர் இம்மருந்தகம் வசதியற்ற சிறிய அறையில் அமைக்கப் பட்டிருந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி மருந்து கொடுக்கு மிடம் அமைந்த தாராளமான நல்ல வசதி செய்யப்பட்ட இடம் இப்போது

இம்மருந்தகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மருந்தகத்திற்குத் தேவையான மருந்துகள் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் தயாரிக்கப்பட்டு அவ்வப்போது தாமதமின்றி கொண்டுவரப் படுகிறது. நோயாளிகட்கு இரண்டு நாட்களுக்கு மேலும் ,ஐந்து நாட்களுக்கு அதிகமாகாமலும் மருந்து வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

Practitioners in Indian System of medicine

* 27 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the **Minister for Public Health be pleased to state—**

(*a*) **whether the time limit for registration as practitioners** of Indian System of Medicine, has been extended; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ஆம்.

வைத்திய மரபில் பயிற்சி பெற்றவர்கள் அல்லது பாம்பரை வைத்தியர்கள் அல்லது வைத்திய மரபில் பயிற்சி பெற்றதுடன் பாம்பரை வைத்தியர்களாக இருப்பவர்கள் ஆகியோர் இந்திய மருத்துவ மத்தியக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்கான கால வரம்பு கடைசி முறையாக 31—3—1973 வரை நீடிக்கப் பட்டிருக்கிறது.

அரசு மருத்துவ மனைப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

* 28. **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரிய அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அருகிலேயே குடியிருப்பு வசதிகள் செய்துதரச் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, பெரிய மருத்துவ மனைகளிலே பணியாற்றுகிற செவிலியர்களுக்கு எல்லாம் 'குவார்ட்டர்ஸ்' அமைக்கப்பட்டிருக்கின்றன. நிரந்தரமான ஊழியர்களாக பணியாற்றுகின்றவர்களுக்கான அவர்கள் பணியாற்றுகின்ற மருத்துவ மனைகளுக்குப் பக்கத்திலேயே அவர்களுக்கான குடியிருப்பு இடங்கள் ஏற்படுத்த எதிர் காலத்திலாவது ஒரு சிறப்புத் திட்டம் கொண்டுவர அரசு ஆவனசெய்யுமா ?